மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Chola Women in Temple Restoration

Dr. S. Senthamizhpavai

Professor & Director, Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi, India

Manuscript ID : **MT1A0001**
Volume : **1**
Issue : **1**
Month : **September**
Year : **2021**
Received: 15.08.2021
Revised: 23.08.2021
Accepted: 29.08.2021
Published: 02.09.2021
Pages : 1-10

ABSTRACT:

The cholas ruled Tamilnadu from 7th century AD to the 12th century AD. The chola period was considered the Golden era in the history of Tamils. Thus, royal ladies, thevaradiyar, working women, home makers have done the divine work along with the housework. Apart from this, this women participated to built temple and other works pertain to temple without any discrimination of various religious like 'siva', 'vainava' and 'samana'. Thereby, the women of chola period contributed in Temple works.

KEYWORDS:

Royal ladies, Thevaradiyar, Working women, Homemakers

REFERENCES :

1. South Indian Inscriptions: Vols. I to III (Text with Translation) Vols. IV to VIII and XIII (Text).
2. K.A.Nilakantha Sastri - The Colas. - 2nd edition 1955. University of Madras.
3. S.R.Balasubrahmanyam - Four Chola Temples., Bhulabhai Memorial Institute,Bombay.
4. History and Culture of the Indian Peoples, Vol.V.Bharatiya Vidya Bhavan, Bombay.
5. T.V. Sadasiva Pandarathar, History of the Later Cholas, Annamalai University.
6. S.R.Balasubrahmanyam, Solar Kalaip - Pani, Jeevan Press, Madurai - 5. 1966.
7. Early Chola Art and Architecture, Bureau of Tamil Publications, Madras Government.

திருக்கோயில் திருப்பணியில் சோழர்கால மகளிர்

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை,
பேராசிரியர் மற்றும் இயக்குநர்,
தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழகத்தை கி.பி.7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12-ஆம் நூற்றாண்டு வரை சிறப்புற ஆட்சி செய்தவர்கள் சோழர்கள். தமிழக வரலாற்றில் சோழர்காலம் பொற்காலமாகக் கருதப்படுகிறது. சோழர்காலத்தில் மகளிர் சொத்துரிமை பெற்று அரசு அலுவல் முதல் அனைத்திலும் பங்கு பெற்றனர். இதனால் அரசமகளிர், தேவரடியார், பணிபுரியும் மகளிர், இல்லற மகளிர் என அனைத்து மகளிரும் இல்லப்பணியோடு இறைப்பணியையும் ஆற்றியுள்ளனர். இதுமட்டுமன்றி சைவம், வைணவம், சமணம் என்ற சமயப் பாகுபாடின்றி அனைத்துத் தெய்வங்களுக்கும் திருக்கோயில் அமைத்தல், கோயில் சார்ந்த பிற பணிகள் செய்தல் என சமயப் பொறையுடன் திகழ்ந்துள்ளனர். இங்ஙனம் திருக்கோயில் திருப்பணியில் சோழர்கால மகளிரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

கருச்சொற்கள்

அரசமகளிர், தேவரடியார், பணிபுரியும் மகளிர், இல்லறமகளிர்

முன்னுரை

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதும் கோயிலைச் சார்ந்த குடிகள், குடிகளைச் சார்ந்த கோயில் என்ற நிலையையும் தமிழ்ச் சமூகக் கொள்கையாகும். தமிழர்களின் இவ்வுணர்விற்குப் பெரிதும் ஏற்றம் தந்தவர்கள் பிற்காலச் சோழர்கள் ஆவார். இச்சோழர் காலத்தில் அரசர்கள் மட்டுமன்றி மகளிரும் இறைப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர். சோழர்கால மகளிரின் திருக்கோயில் திருப்பணி பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரசமகளிர்

முதல் பராந்தகசோழன் காலம் முதல் மகளிர் திருக்கோயில் பணிகளில் ஈடுபட்ட செய்தி கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளது. சோழர்கால மகளிர் சொத்துரிமை பெற்று அரசர்களுடைய அலுவல்களில்; பெரிதும் பங்கு பெற்றதால், அரசிகள் தனிப்பட்ட முறையில் கோயில்கள் எழுப்புவது, கோயில்களில் திருப்பணி செய்வது ஆகிய பொது நலன்களில் ஈடுபட்டிருந்தனர்.

கோயிலுக்கு நிலம் வாங்கத் தானம் அளித்தல்

முதற் பராந்தனின் மனைவியான சோழப்பெருந்தேவியார் ஆன பெரியநங்கை 1080 கழஞ்சுப் பொன்னை, மறவன் சுவரத்துப் பெருமான் அடிகளுக்கு பூசைக்கும் விழாவிற்கும் உதவும்படி நிலம் வாங்க அரிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலத்தின் பெருங்குறிச் சபையாரிடம் அளித்ததை[1] நங்கவரம் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

மேலும் பராந்தகனின் மற்ற இரு தேவிகளான திங்கள் நிம்மடிகளும், புலியூர் நாட்டடிகளும் அந்தவநல்லூர் திருவாலந்துறை மகாதேவர் கோயிலில் விளக்கிற்காக 30 கழஞ்சுப் பொன்னும், பிற தானங்களும் அளித்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.[2]

கண்டராதித்தன் மனைவியும் உத்தமசோழனின் அன்னையுமான செம்பியன் மாதேவியர் பலகோயில்கள் எழுப்பியும் பலகோயில்களைப் புதுப்பித்தும் நிவந்தங்கள் அளித்தும் சோழர்கால மகளிருள் திலகம் போல் விளங்குகின்றார். கீழ்க்காணும்

ஊர்கள்	**கோயில்கள்**
1. செம்பியன் மாதேவி	கைலாசநாத சுவாமி கோயில்
2. கோனேரிராசபுரம்	உமாமகேசுவரர் கோயில்
3. ஆடுதுறை	ஆபத்சகாயேசுவரர் கோயில்
4. திருக்கோடிக்காவல்	திருக்கோடீசுவர் கோயில்
5. குற்றாலம்	சொன்னவாறறிவார் சோளீசுவரம்
6. திருநறையூர்	சித்தநாதசுவாமி கோயில்
7. கண்டராதித்தம்	சிவலோகத்து மகாதேவர் என்னும் சொக்கநாதர் கோயில்
8. விருத்தாசலம்	பழமலைநாதர் கோயில்
9. திருவெண்ணெய் நல்லூர்	திருவருட்டுறைமகாதேவர் கோயில்
10. திருவடந்தை	இடவெந்தை மணவாளப் பெருமாள் கோயில்.

பத்துக்கோயில்களும் அவர்தம் திருப்பணியை இன்றளவும் விளக்கி நிற்கின்றன.[3]

செம்பியன் மாதேவியால் கட்டப்பட்ட கோயில்களுள் மிக முக்கியமானது கோனேரிராசபுரத்திலுள்ள உமாமகேசுவரர் கோயிலாகும். கோனேரிராசபுரம் கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் பாதையில் 24கி.மீ தொலைவில் உள்ளது. அப்பர் தேவாரத்தில் இவ்வூர் திருநல்லம் என்று குறிப்பிடப்படுகிறது. இப்பழைய கோயிலைச் செம்பியன்மாதேவி தன் கணவரின் பெயரால் அவர் நினைவாகக் கற்றளியாகக் கட்டினார். இக்கோயிலின் தென்சுவரில் உள்ள கல்வெட்டு,

"ஸ்வஸ்தி ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார் தம்முடைய திருமகனார் ஸ்ரீமதுராந்தகதேவரான ஸ்ரீஉத்தமசோழன் திருராஜ்யம் செய்தருளா நிற்க தம்முடையார் ஸ்ரீகண்டராதித்ததேவர் திருநாமத்தால் திருநல்முடையாருக்குத் திருக்கற்றளி எழுந்தருளுவித்து தொழுகின்றாராக" [4] என்றுரைக்கும்

இக்கல்வெட்டின் பக்கத்தில் இலிங்கமும், இலிங்கத்தைத் தொழுகின்றாராக அமைக்கப்பட்ட கண்டராதித்தர் சிலையும் சற்று அப்பால் செம்பியன்மாதேவியாரின் சிலையும் காணப்படுகின்றன. கோயில் கட்டியதோடு திருநந்தனவனப்புறமாக இரண்டு வேலி நிலமும் செம்பியன் மாதேவியால்; கோயிலுக்காகத் தானம் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் செம்பியன் மாதேவியால் செய்யப்பட்ட திரிபுரவிஜயர் (திரிபுராந்தகர்), விருஷப வாகனர், கணபதி முதலிய திருமேனிகளின் விசேஷ பூசைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இச்செப்புத் திருமேனிகளை இக்கோயிலில் இன்றும் காணலாம்.

இவையன்றிக் கரந்தை (கருந்திட்டைக்குடி)யிலுள்ள வசிட்டேசுவரர் கோயில், மயூரம் மயூரநாதர் கோயில், திருப்புறம்பியம் ஆதித்தேசுவரமுடையார் கோயில் முதலிய பழைய கோயில்கள் செம்பியன் மாதேவியார் காலத்தில் புதிய முறையில் செப்பனிடப்பட்டன.

இவர் செய்த கோயில் திருப்பணிகளில் தனிச் சிறப்பு முறை ஒன்றைக் காணமுடிகின்றது. ஒரு கோயிலைப் புதுப்பிக்கும் முன்பு அக்கோயிலில் காணப்பட்ட கல்வெட்டுச் சாசனங்கள் அனைத்துக்கும் புதியபடி எடுத்து அமைப்பது அவர் வழக்கம். இருபத்தாறு சாசனங்களுக்கு இவர்படி எடுத்துள்ளார். அவர்படி எடுத்த கல்வெட்டுகளில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ: இதுவும் ஒரு பங்கற்படி' என்ற சொற்கள் சேர்க்கப்பட்டிருத்தல் அதற்குச் சான்றாகும். EP.Rep.540|20

செம்பியன் மாதேவியின் கலைப்பாணி

செம்பியன்மாதேவியார் ஏராளமான கோயில்களைக்கட்டியதால் கோயில் அமைப்பில் தனிப்பாணியை உருவாக்கினார். செம்பின்மாதேவியார் காலத்திற்கு முன்பு மூன்று அல்லது ஐந்தாக இருந்த தேவகோட்டங்கள் அவர் காலத்தில் ஒன்பது முதல் பதினாறு வரை விரிவாக்கப்பட்டன. உதாரணமாகத் திருநறையூர் சித்தநாதசுவாமி கோயிலில் அகத்தியர், நடராசர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரமன், பிச்சாடனர், அர்த்தநாரீசுவரர், துர்க்கை என்ற எட்டு தேவகோட்டச் சிலைகளும், கரந்தையில் முருகன், துர்க்கை, பிச்சாடனர், யமசம்ஹாரமூர்த்தி, வீணாதரதட்சிணாமூர்த்தி, பிரமன், கங்காதரமூர்த்தி, லிங்கோத்பவர், அர்த்தநாரீசுவரர்,

அகத்தியர், தட்சிணாமூர்த்தி, கணபதி, பிச்சாடனர், அப்பர், நடராசர், சம்பந்தர் என்ற 16 தேவகோட்டச் சிலைகளும் காணப்படுகின்றன.[6]

உத்தமசோழனின் (கி.பி.959-985) 8-ஆவது ஆட்சியாண்டில் செம்பியன்மாதேவி; கோனேரிராஜபுரத்தில் அறக்கட்டளை ஒன்று அமைத்தார். அக்கட்டளையிலிருந்து பூமாலை தொடுப்போர், திருநந்தவனம் செய்வோர், சாந்துக்காப்புப் பணி செய்வோர், ஸ்ரீபாதம் தாங்குவோர், திருவலகிடுவோர், திருக்காரகக்காரர், இசைக்காரர், கணக்கர், குயவர், கொல்லர், தச்சர், துன்னகாரர், பரிசாரகர் முதலிய பல்வகைத் தொழில் வினைஞர்கள் போன்றோருக்கு ஊதியம் வழங்கப்பட்ட செய்தி சுட்டப்பெற்றுள்ளது.[7]

குந்தவை நாச்சியார்

இராசராசனுடைய தமக்கையாகிய குந்தவை தம்முடைய பெரிய தாயாரைப் போல தாமும் பலகோயில்கள் அமைத்தும் பல நிவந்தங்களை அளித்தும் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளார். இவர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு அளித்த நிவந்தங்கள் பற்றி நாம் கொடுத்தளவும் நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும் மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் வெட்டுக" [8] என்னும் இராஜராஜனின் மெய்க்கீர்த்தி புலப்படுத்தும்.

கோயில்கள் கட்டுவதிலும் அவற்றிற்குத் தாராளமாக நன்கொடைகள் வழங்குவதிலும் உளங்கனிந்து ஈடுபட்ட இராஜராஜனுடைய தமக்கையாரான குந்தவை ஆழ்வாரால், இராஜராஜனுடைய 21-ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தாராபுரத்தில் குந்தவை விண்ணகரம், இரவிகுல மாணிக்காஃசுவரம், குந்தவை சினாலயம் என்ற திருமால் கோயில், சிவன் கோயில், அருகன் கோயில் என்பன எடுப்பிக்கப்பட்டன. இதன் வழி குந்தவையாரின் கோயில் பணியும் சமயப்பொறையும் புலனாகும்.[9]

குந்தவை தம் தாயாராகிய வானவன் மாதேவியுடன் இணைந்து தில்லைத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்தமை, தஞ்சாவூரில் "சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர்சாலை" என்பதனை ஏற்படுத்தி, அதற்கு வைத்யபோகம் என்ற அறக்கட்டளையையும் உண்டாக்கியமை,[10] தென்னார்க்காடு மாவட்டம் உடையார்க்குடி கோயில் மகாதேவரைத் திங்கள் தோறும் சங்கராந்தி தினத்தன்று ஆயிரம் குடம் நீராட்டுவிக்க, நிலம் வழங்கியமை (EP.Rep.572|20) போன்றவை இவர் தம் திருக்கோயில் பணியில் குறிப்பிடத்தக்கனவாகும்.

பட்டத்தரசியர், இளவரசியர் திருப்பணி

இராஜராஜனின் பட்டத்தரசியான உலகமகாதேவி என்று அழைக்கப்பட்ட தந்திசக்தி விடங்கி திருவலஞ்சுழியில் எடுப்பிக்கப்பட்ட சேத்திரபாலர் கோயிலுக்குப் பொன்னாலான பூக்களை அளித்தாள். இவரால் திருவையாற்று ஐயாறப்பர் கோயிலின் வடக்கு வெளிப்பிராகாரத்தில் உலோகமாதேவீசுவரம் என்று வழங்கப்பட்ட வடகைலாயம் என்ற கோயில் எடுப்பிக்கப்பட்டது. மேலும் உலோகமாதேவியும் அவள் பெண் குந்தவையும் மற்றொரு பெண்ணான மாதேவடிகளும் சேத்திரபாலருக்குப் பல அணிகலன்கள் வழங்கியமையும் அக்கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[11]

இராஜேந்திரனின் மகள் அருண்மொழி நங்கையார் என்ற பிரானார், தன் சகோதரன் இராஜாதிராஜனின் ஆட்சியின் தொடக்கத்தில் திருமழவாடிக் கோயிலுக்கு விலையுயர்ந்த முத்துக்குடை அன்பளித்தாள்.[12]

முதற் குலோத்துங்கன் பட்டத்தரசியாகிய தியாகவல்லியும் தில்லைக் கூத்தனுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளார்.[13] முதற் குலோத்துங்க சோழனுக்கு சகோதரிகள் இருவர். இவர்கள் குந்தவை, மதுராந்தகி என்போராவர். இவ்விருவரும் தில்லையம்பலவாணர்பால் எல்லையற்ற பேரன்பினால் தில்லைத் திருக்கோயிலுக்குச் சிறப்புடைய திருப்பணிகள் செய்துள்ளார்கள். இருவர் குந்தவை என்பார், தில்லைச் சிற்றம்பலப் பெருமான் தண்ணீர் அமுது செய்தருளுதற்கென ஐம்பதின் கழஞ்சு நிறையுள்ள பொன் வட்டிலைத் தில்லைப் பெருங்கோயிலுக்கு மனமுவந்து வழங்கியுள்ளார். இச்செய்தி, “ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவர் திருத்தங்கையார் இராஜராஜன் குந்தவை ஆழ்வார் ஆளுடையார்க்குத் தண்ணீர் அமுது செய்தருள் இட்ட (மி)ண்டம் ஒன்றினால் குடிஞைக்கல் நிறைமதுராந்தகன்[14] என்று கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

குந்தவையாழ்வாராகிய இவ்வம்மையார், கி.பி.1114-ஆம் ஆண்டில் தில்லையம்பலவாணர் திருக்கோயில் முழுவதும் பொலிவுடன் திகழப் பொன்னம்பலத்திற்கு மீண்டும் பொன் வேய்ந்துள்ளார். இச்செய்தி,

நானிலத்தை முழுதாண்ட சயதரற்கு
நாற்பத்து நாலா மாண்டில்
மீனநிகழ் நாயிற்று வெள்ளிபெற்ற
வுரோகணிநான் இடபப் போதால்
தேனிலவு பொழிற்றில்லை நாயகர்தங்
கோயிலெலாஞ் செம்பொன் வேய்ந்தான்

எனவருந் தொழுதேத்தும் இராசராசன்
குந்தவைபூ விந்தை யானே[15]

எனவரும் கல்வெட்டுச் செய்யுளால் இனிது விளக்கும்.

குந்தவையின் சகோதரி மதுராந்தகி என்பார் கி.பி.1116-ஆம் ஆண்டில் தில்லையில் திருச்சிற்றம்பலமுடையார் திருநந்தவனத்திற்கும் சிவனடியார் திருவமுது செய்யுந் திருமடத்திற்கும் நிவந்தமாக இறையிலி நிலங்கள் வழங்கியுள்ளார். இதனை, 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு நாற்பத்தாறாவது ராஜாதிராஜ வளநாட்டுத் தனியூர் பெரும்பற்றப்புலியூர் உடையார் திருச்சிற்றம்பல முடையார்க்குத் திருநந்தவனப்புறமாகவும் ஸ்ரீமாகேஸ்வரர்க்குத் திருவமுது செய்ய மடப்புறம் நம்பெருமாள் திருத்தங்கையார் மதுராந்தகியாழ்வார் வாச்சியன் இரவிதிருச்சிற்றம்பல முடையான் பேரில் விலை கொண்ட நிலம் கடாரங்கொண்ட சோழப் பேரிளமை நாட்டு எருக்காட்டாஞ்சேரியான் ஐயங்கொண்ட சோழ நல்லூர்ப் பால்"[16] என்னும் கல்வெட்டு விளக்கும்.

தேவரடியார்

இசையிலும், கூத்திலும் வல்லுநரான பெண்கள் பலர் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். கல்வெட்டுகளில் இவர் தேவரடியார்கள் என்ற அழைக்கப்பட்டுள்ளனர். தேவரடியார்களுக்குத் தலைக்கோலிகள், தளிச்சேரிப் பெண்டுகள், பதியிலார், கோயிற் பிணாக்கள் என்றும் பெயர்கள் வழங்கின. கோயிலில் திருவலகிடுவதும், திருமெழுக்கிடுவதும், மலர் தொடுத்தலும், தேவரடியார்கள் மேற்கொண்டிருந்த திருத்தொண்டுகளிற் சில. தேவாரம், திருவாசகம் ஓதுவதும், நடனம் ஆடுவதும், அவர்கள் சிறப்பாக ஈடுபட்டிருந்த கலைத்தொண்டுகளாகும்; ஏறக்குறைய எல்லாக் கோயில்களிலுமே தேவரடியார்கள் தொண்டு செய்துள்ளனர். திரண்ட செல்வத்தையும் மேலாம் செல்வாக்கையும் பெற்றிருந்த தேவரடியார்கள் பல கோயில்களுக்கும் கலைவளர்ச்சிக்கும் நன்கொடைகளும் வழங்கியுள்ளனர்.[17]

பிற மகளிர்

அரசமகளிர், தேவரடியார் தவிர்ந்த இல்லறமகளிர் பலரும் திருக்கோயில் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர். இராஜராஜனின் எட்டாம் ஆண்டில், உடையார் லாடராசர் புகழ்விப்பவர் கண்டானின் மகன் உடையார் வீரசோழரின் மனைவி ஒரு சமணக் கோயிலுக்கு வரிப்பொருளில் சிலவற்றைச் செலுத்தினாள்.[18] முத்தானபொன்நங்கை என்னும் பெண் திருவையாற்றுக் கோயிலிலுள்ள தெய்வங்களுக்கு அணிகலன்கள் வழங்கியதை முதலாம் இராஜேந்திரனின் திருவையாறு கல்வெட்டு, கோப்பரகேசரி பகராந உடையார் ஸ்ரீராஜேந்திர

தேவர்க்குயாண்டு 3ஆவது ராஜேந்திர சிங்கவளநாட்டு பொய்கைநாட்டு திருவையாற்றுத் தென் கயிலாயமுடையார் கோயிலில் ஆடவல்லார்க்கு நம்பிராட்டியர் திரைலோக்கியம் முடையார் அதிகாரிச்சி முத்தான பொந்நங்கை சாத்தி அருளத் திருக்கழுத்துக்கு இட்ட சண்பங்காறை ஒன்றுக் குடினைக் கல்லால் பொந் அறுகழஞ்சம் இதில் கட்டிந மாணிக்கம் ஒன்றும் பயிர மிரண்டும் உட்பட நிறை அறுகழஞ்சேய் மஞ்சாடியும் மஞ்சுமாவும் திருக்கைக்கு சாத்தி அருள இட்ட திருக்கைக்காறை ஒன்று பொந் இரு கழஞ்சாக இரண்டிநால் பொன் அறுகழஞ்சும் ஆக பொந்இருபதின் கழஞ்சும் இது மாணிக்கம் ஒன்றும் வயிரம் இரண்டும் உட்பட நிறை இருபதின் கழஞ்சேய் மஞ்சாடியும் மஞ்சு மாவும். இவர் நம்பிராட்டியார்க்கு சாத்தி அருள இட்ட ஒற்றைத் தாலிமணி பதின்று ஒருபது முடையின. இங்கு ஒன்றும் கொக்குவாய் ஒன்றும்" .[19]

நக்கன் பாவையார் என்பவர் தில்லைக் கூத்தனாகிய திருச்சிற்றம்பலமுடைய பெருமான் திருவானித் திருநாளில் திருவீதிக்கு எழுந்தருளும் அன்றைக்கு வேண்டும் செலவுகட்கும், அமுதுபடைக்கும், சிவனடியார்களுக்குச் சட்டிச்சோறு ஆயிரம் கொடுக்கவும், திருவிழாவுக்கு வேண்டும் எண்ணெய்க்கும் வேண்டும் வழக்கத்துக்கும், பரிசட்டம் (இறைவனுக்குரிய ஆடை) திருவிளக்கு எண்ணெய் முதலிய செலவுகட்டும், திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பஞ் செய்வதற்கும் ஆண்டொன்றுக்கு மேல்வாரம் இரண்டாயிரத்திரு நூற்றைம்பதின் கலம் ஆக வருவாயுள்ள நாற்பத்துநாலு வேலி நிலம் நிபந்தமாக அளித்துள்ளார்.[20]

அல்லூர் இறைவனுக்கு உலகமகராசி என்ற பெண் நிலை விளக்கு ஒன்று அளித்து அதை எரிக்க ஐம்பது கழஞ்சுப் பொன் கொடையளித்தார்.[21]

வீரசோழ இளங்கோவேள் என்பவள் இறந்து போனதும் அவனுடைய மனைவி கங்கமாதேவி உடன்கட்டை ஏறி உயிர் நீத்தாள். அப்படித் தீப்பாயுமுன் இருபது கழஞ்சுப் பொன்னை அல்லூர்க் கோயிலுக்குக் கொடையாக வழங்கி ஒரு நந்தாவிளக்கு எரித்துவருமாறு ஏற்பாடு செய்தாள். அதை மேற்படி கோயில் பட்டுடையார் குழு ஏற்றுக்கொண்டது.[22]

சோழர்காலத்தில் மகப்பேறில்லாத மகளிர் கோயிலிலுள்ள அம்பிகையை மகளாக சுவீகாரம் செய்துகொண்டு திருக்கல்யாணம் செய்துவைத்தனர் அப்போது தாராளமாக நிலக்கொடைகள் வழங்கினர். வேட்டன் சேந்தன் என்பாரின் மகள் சேந்தன் காரி என்பவள் அவ்வாறு ஸ்திரீதனமாக நிலங்களை எழுதிவைத்த செய்தி[23] கல்வெட்டினால் அறியப்படுகிறது.

கோயிலைச் சேர்ந்த வேத பாடசாலையும் உணவு விடுதியும் ஆதுலர்சாலையும் ரிக்வேதம், யஜூர்வேதம், ஆகமங்கள், தந்தரங்கள், கற்பிக்கப்பட்டன. உணவு

விடுதியில் 60 பேர்களுக்கு உணவு, பாய் விளக்கெரிக்க எண்ணெய், 51 சனிக்கிழமைகளில் எண்ணெய்க் குளியலுக்கான எண்ணெய் முதலியன அளிக்கப்பட்டன. ஆதுரசாலையில் வைத்யன் சல்லியக்கிரியை பண்ணுவான், மூலிகை கொணர்வான், விறகுதருவான், செவிலி, அம்பட்டன், காவலன், ஆகியோர் பணி செய்தனர். வியாதிபட்டுக் கிடப்பாருக்காக மருந்துகள் எப்போதும் கைவசமிருந்தன சரகஸம்ஹிதை, சுச்ருதஸம்ஹிதை, அஷ்டாங்கஹிருதயம் முதலிய ஆயுர்வேத நூல்களில் சொல்லப்பட்ட மருந்துகள் தயாரிக்கப்பட்டன. அதற்காக 40 காசுகள் செலவிடப்பட்டன. தஞ்சாவூரிலும் “சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர்சாலை” [24] ஒன்றினைக் குந்தவை ஆழ்வார் என்ற அரசியார் ஏற்படுத்தி அதற்கு வைத்யபோகம் என்ற அறக்கட்டளையையும் உண்டாக்கி வைத்தாள்.

சிறிய வேளார்தேவி இராசாதிச்சி என்பவளும் அவளுடைய மகள் குஞ்சரமல்லியும் ஒரு கோயிலில் இரண்டு விளக்கு எரிக்க இருபத்தைந்து ஈழக் காசுகள் அளித்தார்கள்.[25]

முடிவுரை

தமிழகத்திருக் கோயில் வரலாற்றில் பிற்காலச் சோழர்காலம் பொற்காலமாகப் போற்றப்பெறுகிறது. இத்தகு சிறப்பிற்கு, சோழர்கால மகளிரின் திருக்கோயில் பணிகள் பெரிதும் துணை செய்துள்ளன. அரச மகளிர், தேவரடியார், பணிபுரியும் மகளிர், இல்லற மகளிர் என அனைத்து நிலையிலுள்ள மகளிரும் திருக்கோயில் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர் என்பதைச் சோழர்காலக் கோயில் வரலாறு புலப்படுத்துகின்றது.

புதிய கோயில் கட்டுதல், பழைய கோயில்களைச் செப்பனிடுதல் தெய்வப் படிமங்களை உருவாக்குதல், பொன்வேய்தல், அணிகலன்கள் வழங்குதல் என்னும் நிலையில் மகளிர்தம் திருப்பணிகள் அமைந்துள்ள திருக்கோயிலின் தண்ணீர்த் தேவையை உணர்ந்து அதற்குக் கொடை வழங்குதல், சைவம், வைணவம், சமணம் என்ற சமயப்பாகுபாடின்றி அனைத்துத் தெய்வங்களுக்கும் திருக்கோயில் அமைத்தல் மகளிர்தம் சமயப் பொறையைப் புலப்படுத்துகின்றன. மகளிர் தம்மைப் போன்றே இறை உருவங்களையும் அலங்கரிப்பதில் மகிழ்ச்சி கொண்டு பல்வேறு அணிகலன்களை திருக்கோயில்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேவரடியார் நிலையிலுள்ள மகளிர் திருக்கோயிலுக்குரிய அடிப்படைப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதோடு திருக்கோயிலைச் சார்ந்த கலைகள் வளர்வதற்குக் கொடைகள் வழங்கி, சரியைத் தொண்டோடு கலைத்தொண்டையும் சேர்த்துச் செய்துள்ளமை சுட்டுதற்குரியது.

சான்றெண் விளக்கம்

1. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சோழர்கலைப்பாணி, ப.92
2. மேலது, ப.93
3. மேலது, ப.121
4. நடனகாசிநாதன், கு.தாமோதரன், (தொகுதி) கல்வெட்டு ஓர் அறிமுகம், ப.88
5. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், ப.317
6. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சோழர்கலைப்பாணி, ப.122
7. இரா.அரங்கராசன், தமிழகக் கோயிற்கலை, ப.253
8. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், ப.247
9. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சோழர்கலைப்பாணி, ப.126
10. வெள்ளைவாரணனார், தில்லைப்பெருங்கோயில் வரலாறு, ப.97
11. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சோழர்கலைப்பாணி, ப.127
12. கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, சோழர்கள், ப.305
13. தெ.இ.க.தொகுதி.4 பக்.34
14. வெள்ளைவாரணனார், தில்லைப்பெருங்கோயில் வரலாறு, ப.100
15. எபிராபிகா இண்டிகா தொகுதி5, பக்.105
16. தெ.இ.க.தொகுதி4, ப.222
17. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், பக்.317-318
18. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப.254
19. நடனகாசிநாதன், கு.தாமோதரன், (தொகு) கல்வெட்டு ஓர் அறிமுகம், ப.22
20. தெ.இ.க.தொகுதி 4 ப.223
21. இரா.அரங்கராசன், சோழர் காலக் கோயிற்பணிகளும் ஆட்சிகளும், ப.263
22. மேலது, ப.264
23. மேலது, ப.256 (151, 1936-37) பரகேசரிவர்மனின் (15 வது ஆட்சி ஆண்டு)
24. இரா.அரங்கராசு, திருக்கோயில்களும் சமுதாயப்பணிகளும், ப.256
25. தெ.இ.க.தொகுதி3, ப.122

துணைநூற்பட்டியல்

1. தென்னிந்தியக் கல்வெட்டுகள்:தொகுதிகள். I to III & Vols. IV முதல் VIII மற்றும் XIII உரை.
2. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி - சோழங்கள். - 24 பதிப்பு 1955. மெட்ராஸ் பல்கலைக்கழகம்.
3. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் - நான்கு சோழர்கள் கோவில்கள்., புலன்சி நினைவு நிறுவனம், பம்பாய்.
4. இந்திய மக்களின் வரலாறு மற்றும் கலாச்சாரம்,Vol. V. பாரதிய வித்யா பவன், பம்பாய்.
5. டி.வி. சதாசிவ பண்டாரத்தார், வரலாறு பிற்கால சோழர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
6. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சோழா கலைப் பாணி ஜீவன் பிரஸ், மதுரை - 5. 1966.
7. ஆரம்ப காலச் சோழர் கலை மற்றும் கட்டிடக்கலை, பணியகம் தமிழ் பப்ளிகேஷன்ஸ், சென்னை, தமிழ்நாடு அரசு.